# அடக்குமுறைக்கு பகிஷ்கரிப்பு!


# ஆரம்பம்

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் வெளியீடு — இல: 3, 22வது ஒழுங்கை கொழும்பு 3.
பிரசித்த செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

மலர்: 2 டிசம்பர் 1976 விலை 30 சதம் இதழ்: 6


# பொலீஸ் வெடிக்கு பதிலடி நவ. 26

**பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் நவம்பர் 12ந் திகதி வெள்ளிக்கிழமை காலையில் மாணவர்கள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகஞ் செய்து நிராயுதபாணிகளாக நின்றவர்களைத் தடிகளால் தாக்கித் துப்பாக்கியால் சுட்டதினால் குறைந்தபட்சம் ஒரு மாணவன் உயிர் துறப்பதற்கும் வேறு பலர் காயம் உறுவதற்கும் காரணமாயமைந்த பொலீஸ் பயங்கரவாதச் செயலை வன்மையாகக் கண்டிக்கும் முகமாக நவம்பர் 26ந் திகதி வெள்ளிக்கிழமை இந்நாட்டின் முக்கிய பொருளாதார துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களும், மாணவர்களும், ஆசிரியர்களும் மற்றும் ஏனைய மக்கள் பகுதியினரும் ஒரு நாள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.**

நகர்ப் புறங்களிலும் கிராமங்களிலுமுள்ள அரச கூட்டுத்தாபனங்கள், வங்கிகள் மற்றும் தனியார் ஸ்தாபனங்களிலும், தோட்டப் பகுதிகளிலும், துறைமுகங்களிலும் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் நவம்பர் 26ந் திகதி நடைபெற்ற அடையாளவேலை நிறுத்தத்தில் பங்குபற்றினர்.

1971ல் நடைபெற்ற கணக்கிடமுடியாத படுகொலைகளுக்கும், பயங்கர நிலைமைக்கும், ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டமைக்கும், நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகளை இதுகாலவரை சிறையில் அடைத்து வைத்திருப்பதற்கும் மட்டுமல்லாது இந்நாட்டு மக்களின் ஜனநாயக சுதந்திரங்களைக் குழிதோண்டிப் புதைப்பதற்கும் அடிகோலிய 1971 மார்ச் 16ந் திகதி அரசினால் அமுலாக்கப்பட்ட அவசரகால நிலைமையை எதிர்த்தும் இந்த மாபெரும் பகிஷ்கரிப்பு நாடெங்கிலும் நடைபெற்றது.

இந்த நடவடிக்கையானது இந்நாட்டின் தொழிலாள வர்க்கத்தின் தலைமையிலான விவசாயிகள், மாணவர்கள் ஆகிய சகலவிதமான பாட்டாளிகளுக்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நாளாக அமைந்தது மட்டுமன்றி முதலாளித்துவ அரசினால் மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பொலீஸ் பயங்கரவாத நடவடிக்கைகள் அனைத்திற்கும் மக்கள் அளித்த பதிலடியுமாகும்.

பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் பொலீஸார் நடத்திய தாக்குதலின்போது பட்டதாரி மாணவரான தோழர் வீரசூரிய என்பவர் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகிய பரிதாபமான செய்திஇன்று உலகறிந்த செய்தியாகிவிட்டது.

இச் சம்பவம் குறித்து தக்கதோர் எதிர்ப்பு நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசிப்பதற்காக மாணவர் சங்கங்களின் அழைப்பின்பேரில் 1976 நவம் 18ந் திகதி கூடிய தொழிலாளர்களினதும், ஆசிரியர்களினதும் தொழிற் சங்கங்களும் மாணவர் சங்கங்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்ட தீர்மானத்திற்கிணங்கவே இந்த ஒன்றுபட்ட பகிஷ்கரிப்பு நடவடிக்கை நாடெங்கிலும் மேற்கொள்ளப்பட்டது.

நவம்பர் 26ந் திகதி நடைபெற்ற பொது நடவடிக்கையில் பங்குகொள்வதென்ற தீர்மானத்தில் கையெழுத்திட்ட சங்கங்கள் பின்வருவனவாகும்.

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அரசசேவைதொழில்நுட்ப உத்தியோகத்தர் தொழிற் சங்க சம்மேளனம், அரசாங்க தொழிலாளர் தொழிற் சங்க சம்மேளனம், இலங்கை தொழிலாளர் சம்மேளனம், அரசாங்க எழுதுவினைஞர் சேவை சங்கம், இலங்கை தொழிலாளர் கூட்டுச் சம்மேளனம். இலங்கை தொழிற்சங்க மத்திய சபை, இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம், அஞ்சல் தந்தி தொலைத் தொடர்புச் சேவையாளர் சங்கம், இலங்கை வங்கி ஊழியர் சங்கம், இலங்கை பட்டதாரி ஆசிரியர் சங்கம், ஐக்கிய தொழிலாளர் சங்கம், இலங்கை சீமெந்து ஊழியர் சங்கம், இலங்கை தொழிற் சங்க சம்மேளனம், பேராதனை வளாக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம். சர்வ - வளாக மாணவர் சம்மேளனம்.

இலங்கை தோட்டச் சேவையாளர் சங்கமும் இலங்கை அரச பெருந் தோட்டச் சேவையாளர் சங்கமும் இந்த நடவடிக்கையில் பங்குபற்றின.

நடவடிக்கையில் பங்குபற்றுவதாகத் தீர்மானத்தில் கையெழுத்திட்ட சங்கங்களுள் லங்கா சமசமாஜக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள இலங்கைதொழிலாளர் சம்மேளனமும், அரசாங்க தொழிலாளர் தொழிற் சங்க சம்மேளனமும், அரசாங்க எழுது வினைஞர் சங்கமும் பங்குபற்றவில்லை. இத்துடன் அஞ்சல் தந்தி தொலைத் தொடர்புச்சேவையாளர் சங்கமும் பங்குபற்றவில்லை.

இந்த மகத்தான ஒன்றுபட்ட எதிர்ப்பு நடவடிக்கையில் இலங்கையின் நாலாபக்கங்களிலுமுள்ள சகல தொழிலாளர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மத குருமார்கள் மட்டுமன்றி நியாயத்திற்கு மதிப்பளிக்கும் ஆண் பெண் அனைவரையும் ஒருமித்த குரலில் ஒன்றிணைந்து எச்சரிக்கை விடுக்கக் கோரி இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தினால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டிருந்தது இவ்வாறாகும்.

''இப் பயங்கரவாதத்தை நிறுத்து! இப் பயங்கரமான மக்கள் அடக்குமுறை, இவ்வெட்கக்கேடான குண்டாந்தடி – துப்பாக்கிப் பிரயோகம், இப் பயமுறுத்தல், இந்த இரத்தம் சிந்தல் மற்றும் இக்கொலை ஆகிய அனைத்தையும் நிறுத்து! இந்த அருவருக்கத்தக்க அவசர கால நிலைமையை அகற்று!''

''இப்போது அதிகாரத்தில் அமர்ந்திருக்கும் முதலாளித்துவ பிரதிநிதிகள் கூட்டத்தினருக்கு, உங்களது இத்தகைய கேலவமான செயல்முறைகளை நிறுத்துவதற்கு எமக்கு இப்போது காலம் வந்துவிட்டது'' என்று கூறிவைப்போம். ''ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக வாய்ஊறிக்கொண்டு இருக்கும் ஐக்கிய தேசியக்கட்சியுட்பட்ட முதலாளித்துவ கூட்டத்தினர் எவராலும் இச் செயல்முறை மீண்டும் உயிர்பெற்று தலை தூக்க முடியாதவாறு உறுதி பூண்ட இலட்சியத்தோடும், நன்கு புரிந்துகொண்டும் கைகோர்த்த வண்ணம் அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்து நாம் எழுதிடுவோமெனக் குரலெழுப்பிக் கூறிடுவோம்.

நவம்பர் 26ந் திகதி நடைபெறும் தொழிலாள வர்க்கத்தினரினதும், பொது மக்களினதும் போராட்டத்திற்கு வெற்றி!''







இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் 14வது பேராளர் மகாநாட்டில் அதன் பொதுச் செயலாளர் தோழர் பாலா தம்புவும் (மேலே) அங்கு அழைப்பின் பேரில் வருகை தந்திருந்த இலங்கை தோட்டச்சேவையாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் ரொபர்ட் பெரேராவும் (கீழே) உரையாற்றுகின்றனர்.

## வடபகுதியில் கூட்டுறவு ஊழியர் சம்மேளனம்

# நடத்திய வேலை நிறுத்தம்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய நிர்வாகம் மாற்றப்பட வேண்டுமென்றும் அச்சங்கத்தின் ஊழியர்கள் சம்பந்தமான பிரச்சினைகளை முன்வைத்தும் கூட்டுறவு ஊழியர் சம்மேளனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தபோது அக்டோபர் 6ந் திகதி அச்சங்கத்திற்குரிய சில சில்லறை விற்பனை நிலையங்கள் எதேச்சாதிகாரமாக திறக்கப்பட்டுப் வெளியாட்களிடம் பங்கீட்டுப் பொருள் விநியோகம் ஒப்படைக்கப்பட்டதை ஆட்சேபித்து வடபிராந்தியத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அந்த வேலை நிறுத்தம் விஸ்தரிக்கப்பட்டது.

பண்டத்தரிப்பு பரிஸ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இயங்கும் கூட்டுறவு ஊழியர் சம்மேளனக் கிளையின் வேண்டுகோளை ஏற்று அங்கு அண்மையில்ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை வர்த்தக ஊழியர்சங்கத்தின் கிளையும் அந்த வேலை நிறுத்தத்துக்கு ஒற்றுமை தெரிவித்து வேலை நிறுத்தம் செய்தது.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு. ரி. இராஜசுந்தரத்தை மாற்ற வேண்டுமென்றும், நிர்வாகத்தைக் கலைக்க வேண்டுமென்றும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் கோரியிருந்தனர்.

''வேலை நிறுத்தத்தைத் தீர்த்து வைப்பதற்கு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் பங்குகொண்டோரில் பெரும்பாலோனோர் திரு. இராஜசுந்தரம் தலைவர் பதவியிலிருந்து விலகியிருப்பது தான் வேலை நிறுத்தத்தைத் தீர்ப்பதற்குச் சுமுகமான வழி என ஆலோசனை தெரிவித்தும் அவர் அதற்கு இணங்கவில்லை'' யென்று 14-10-76ல் வீரகேசரி செய்தி வெளியிட்டிருந்தது.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் கிளை உறுதியோடு நடத்திய 107 நாட் போராட்டத்தின் விளைவாலும் பொதுமக்கள் அளித்த ஆதரவினாலும் கூட்டுறவு அதிகாரியால் கலைக்கப்பட்ட மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் அதிகார சபைக்கும் திரு. ரி. இராஜசுந்தரமே தலைவராக


6ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அடக்குமுறையை நிறுத்து!

# தேர்தலில் சங்கம் தலையிடுவதை பேராளர் மகாநாடு அங்கீகரித்தது!

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் தனது சொந்த அபேட்சகர்களை போட்டியிட நிறுத்துவதென்ற தீர்மானம் சங்கத்தின் 14வது பேராளர்மகாநாட்டில் நிறைவேறியது. இதன்படி சங்கத்தின் உறுப்பினர்கள் நியாயமான அளவு குடியிருக்கும் தேர்தல் தொகுதிகளில், பொதுச்சபை தேர்ந்தெடுக்கும் அபேட்சகர்கள் போட்டியிட நிறுத்தப்படுவார்கள்.




கடந்த அக்டோபர் 22, 23, 24ந் திகதிகளில் கொள்ளுபிட்டியிலுள்ள சங்கத் தலைமையக மண்டபத்தில் நடைபெற்றசங்கத்தின் பேராளர் மகாநாட்டில் இந்தத் தீர்மானம் சம்பந்தமாகப் பொதுச்செயலாளர் தோழர் பாலாதம்பு பேசுகையில், தொழிலாளர் வர்க்கத் தலைமையில் இந்நாட்டு வறுமையில் வாடும் மக்களின் சார்பில் இதுவரை நடத்தப்பட்ட இடையருத இயக்கத்தைவெகு ஜனங்களுடன் சேர்ந்து தொடர்ந்து மேலும் முன் நடத்திச் செல்வதற்காகவேசங்கம் இந்த அடியைமுன் எடுத்து வைக்கக் கருதியது என்றுகுறிப்பிட்டார். ''மக்களுடைய மனதை கவருவதற்காகவே நாம் போராட்டத்தை நடத்துகிறோம். 1970லிருந்து நாம் இந்த முதலாளித்துவ அரசுக்கு முதலாளித்துவ ஐக்கிய தேசீயக் கட்சியைப் போல் இருக்கவில்லை. மக்களுக்குரிய சுதந்திரத்தை வென்றெடுக்க வழிகாட்டும் ஒரு தொழிலாளர் வர்க்க ஸ்தாபனம் என்ற ரீதியிலேயே இருந்து வந்திருக்கிறோம். லங்கா சமசமாஜக் கட்சியைப் போலவோ, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியைப் போலவோ அரச அதிகாரத்தை பாதுகாத்துக் கொண்டு நாம் செயல்படவில்லை''. இவ்வாறு தோழர் பாலாதம்பு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் பெரும்பான்மையோருடைய விருப்பத்துக்கிணங்கவே எதிர்வரும் பொதுத்தேர்தலில் தலையிடுதற்கு வேலைத்திட்டத்தை வகுக்க வேண்டுமென்றும் இந்தத் தீர்மானப்படி செயலில் ஈடுபட முடியுமென்றுல்மாத்திரமே சாதகமாக்வாக்களிக்கும்படியும் கூறினர். அவர் மேலும் கூறுயதாவது: ''நாம் இதற்கு இணங்குவோமானுல் உடனடியாகவே செயலாற்ற வேண்டும். கிளைக்கூட்டங்களை நடத்த வேண்டும். அறிக்கைகளை வெளியிடவேண்டும். யதார்த்தமான தொழிலாளர் வர்க்கக் குரலை இப்பொழுதிருந்தே எழுப்ப வேண்டும். எதிர்பார்த்தவைகள் எல்லாம் சர்வ நாசமாகிவிட்ட நிலையிலுள்ள தரித்திரத்தில் தத்தளிக்கும் மக்களை, நாம்நடத்தி வந்த பரிசுத்த இயக்கத்தினுல் வருங்காலம் பற்றிப் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தி முன் நடத்திச் செல்ல முடியும். அவ்வாறு செய்யவேண்டிய கடமை தொழிலாளர் வர்க்க அமைப்பான நமக்கு இருக்கிறது''. மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் ''நமது வேலைத் திட்டங்களுக்கு அனுகூலமாக தகுந்த முன்னணி ஒன்றை அமைக்க பேச்சுவார்த்தைகள் நடத்தவும் நாம் தயார் என்று தெரிவித்தார்.

பேராளர் மகாநாட்டை ஆரம்பித்து வைத்த சங்கத் தலைவர் தோழர் எச்.பி. ஹரிஸ் சந்திர கூறியதாவது:-

''13வது பேராளர் மகாநாட்டுக்கும் 14வது மகாநாட்டுக்குமிடையிலான காலகட்டத்தில் நமது சங்கத்தின் சுயரூபத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. ஆரம்பகாலத்திலிருந்து சங்கம் வளர்ந்து வந்த வளர்ச்சியின் ஒரு திருப்பம் இது.

''இப்போது தொழிலாளர் வர்க்கத்தின் சார்பில் செயல்படும் வெகுஜனங்களுடைய ஒரு ஸ்தாபனமாக சங்கம் அபிவிருத்தியடைந்து வருகிறது. 1975 ஜனவரி 31ந் திகதி அக்காலமிருந்த கூட்டணி சங்கங்கள் அரசாங்கம் அளித்த சிறு சலுகையை ஏற்றுக்கொண்டு போராடாமல் ஒதுங்கியபோதிலும், அன்று இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் மாத்திரம் தனியாக வேலைநிறுத்தம் செய்தது. நாம் அந்த நிலையைஎடுக்காமலிருந்தால் 1976 பெப்ரவரி 20ந் திகதி நடைபெற்ற தொழிலாளர் வர்க்கத்தின் வெற்றிகரமான வேலைநிறுத்தம் நடைபெருமலிருந்திருக்கலாம்.

அரசாங்க சார்பு கூட்டணி தொழிற் சங்கங்களின் தலைமை பீடம் செயலற்றுப்போயிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நமது சங்கமும் மற்றும் சில சங்கங்களும் ஒன்றுபட்டு தொழிற் சங்க கூட்டுச்சபை ஒன்றை அமைத்துக் கொண்டிருக்கிறது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமைக்குள் முற்போக்கு அமைச்சர்கள் இருக்கிறார்களென்று லங்கா சமசமாஜக் கட்சி அங்கீகரிக்கிறதென்பதை துல்கிரிய, வியாங்கொட நெசவுத் தொழிற்சாலைகள் மூடப்பட்டது சம்பந்தமாக தொழில் மந்திரியுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது எனக்குத் தெரியவந்தது. கம்யூனிஸ்ட்கட்சியோ, முழு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையும் முற்போக்கானதென்று கருதி வருகிறது என்று தெரிகிறது. ஆனுல், அந்த போலிமுற்போக்கு அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் நமது சங்கத்தின் கூட்டுத்தாபனக் கிளை பிரிவுகளில் ஊழியர்களின் பதவி உயர்வு, மாற்றும் விடயங்களில் நடத்திவரும் தில்லுமுல்லுகளிலிருந்தும், தாக்குதல்களிலிருந்தும் இந்த அரசாங்கத்தின் பிற்போக்குத்தனம் பட்டவர்த்தனமாகின்றது. தற்காலம் நமது சங்கம் போலி ஜனவாசத்திலும் புகுந்து பரவி வருகிறது. எவ்வளவு கொடூரத் தாக்குதல்கள் வந்த போதிலும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் அவர்கள் ஒழுங்கமைவதுமூலம் தொழிலாளர் வர்க்கத்தினர் மத்தியில் நம்மீது ஏற்பட்டிருக்கும் பலத்த நம்பிக்கை பகிரங்கமாகின்றது''.

அழைப்பின் பேரில் வருகைத் தந்த பேச்சாளரான இலங்கை தோட்டச்சேவையாளர் சங்கப் பொதுச்செயலாளர் தோழர் ரோபட் பெரேரா அவர்கள் பேசுகையில், தமது சங்கம், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு செயலாற்றியிருக்கிறதென்று தெரிவித்தார். உங்களுக்கு எமது ஒத்துழைப்பும், எமக்கு உங்களுடைய ஒத்துழைப்பும் என்ற அடிப்படையில் நாம் ஒன்றுபட்டுப் போராடுவோம் என்ருர் அவர்.

எதிர் வரும் பொதுத்தேர்தலில் போட்டியிட அபேட்சகர்களை நிறுத்த இலங்கை தோட்டச் சேவையாளர் சங்கம் தீர்மானித்திருக்கிறதென்று கூறிய தோழர் ரோபட் பெரேரா நூரலை, பசறை ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிட அபேட்சகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள் என்றும் கூறினர்.

அவர் மேலும் சொன்னுர். பொதுத்தேர்தலையும், பாராளுமன்றத்தையும் மேடைகளாக உபயோகித்து முதலாளித்துவ ஊழல்களை அம்பலப்படுத்துவதே எமது நோக்கம். பாராளுமன்ற உறுப்பினர்கள் கையிலிருக்கும் பட்டியலின்படியே தோட்டங்களில் நியமனங்கள் நடைபெறுகின்றன. தொழிலாளர்களிடம் பழிவாங்குதலும், சங்கங்களுக்கு அநியாயம் செய்தலும் தாராளமாக நடைபெறுகின்றன. இவைகளுக்கு எதிராக ஒன்றுபட வேண்டும். இல்லாவிட்டால் விரைவில் சேவையாளர்கள் ஆயிரக்கணக்கில் வெளியே தள்ளப்படுவார்கள்.

மூன்று தினங்கள் நடைபெற்ற இலங்கை வர்த்தகஊழியர் சங்கத்தின் 14வது பேராளர் மகாநாட்டில் 350க்கு அதிகமான பிரதிநிதிகள் பங்குபற்றியதுடன் 40 பிரதிநிதிகள் உரையாற்றினுர்கள்.

# தோழர் வேர்ணன் புதிய தலைவரானுர்

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் தலைவராகத் தோழர் வேர்ணன் விஜேசிங்க அண்மையில் நடைபெற்ற சங்கத்தின் 14வது பேராளர் மகாநாட்டில் தெரிவுசெய்யப்பட்டார். இத்தெரிவின் பிரகாரம் தொடர்ந்து இரு வருடங்களுக்கு அவர் இப் பதவியை வகிப்பார். சங்கத்தின் 13வது பேராளர் மகாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட தலைவரான தோழர் எச். பி. ஹரிஸ்சந்திர இம்முறை தலைவர் பதவிக்கான தெரிவுக்கு முன்வர விரும்பவில்லை.

புதிய தலைவர் தோழர் வேர்ணன் விஜேசிங்க சங்கத் தலைமையகத்தின் கைத்தொழில் பிரிவிற்குப் பொறுப்பான சிரேஸ்ட உதவிச் செயலாளராக முழுநேர அடிப்படையில் கடமை ஆற்றினர். அவர் தலைவர் பதவியிலிருந்து கொண்டு தான் முன்னர் பொறுப்பாக விருந்த கடமைகளைக் கவனித்து வருவார்.

தோழர் வேர்ணன் 1955ல் ''டைம்ஸ்'' பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றிய போது இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் சேர்ந்தார். பின்னர் அக் கிளையின் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். 1964ல் சங்கத்தின் முழுநேர ஊழியராகக் கடமையாற்றுவதற்காக அவர் ''டைம்ஸ்'' பத்திரிகை நிறுவனத்தில் தான் வகித்த செய்தி நிருபர் பதவியை இராஜினுமாச் செய்தார். அக் காலம் தொட்டு அவர்சங்கத்தின் கைத்தொழில் பிரிவுக்கும், அத்துடன் சிறிது காலம் அரச கூட்டுத்தாபனப் பிரிவுக்கும் பொறுப்பாகக் கடமையாற்றினுர்.

முன்னுள் உப தலைவர் பதவி வகித்த கார்சன் கமபர்பாட்ச் கிளையைச் சேர்ந்த தோழர் ஆர். சீதாபதி ஐயரும், நிறைவேற்று சபையின் முன்னுள் உறுப்பினரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலுள்ள சங்கத்தின் கிளைத் தலைவருமான தோழர் விஜயானந்த

5ம் பக்கம் பார்க்க



சங்கத்தின் முன்னுள் தலைவர் தோழர் ஹரிச்சந்திரா புதிய தலைவர் வேர்ணன் விஜேசிங்காவை கைகுலுக்கி வாழ்த்துகிருர்

தேர்தலை ஒத்தி வைக்காதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழுமுன் விஜேவீர

ரோகண விஜேவீர சிறைப்படுத்தப்பட்டு 5 ஆண்டுகள் கடந்துவிட்டன. அவர் 1971 மார்ச் 13ம் திகதி கைது செய்யப்பட்டார். ஏப்ரல் கிளர்ச்சி என்று கூறப்பட்ட சம்பவங்கள் நடைபெறுவதற்கு மிக முன்னதாக 1971 மார்ச் 16ல் அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டது. குற்றவியல் நீதி ஆணைக்குழுவினால் '1971 ஏப்ரல் கிளர்ச்சி' சம்பவங்கள் தொடர்பாக விஜேவீரவுக்கு முதலில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் அத்தண்டனை 20 வருட கடூழியச் சிறைத்தண்டனைக்கு மாற்றப்பட்டது. ஆணைக்குழுமுன் விஜேவீர ஆற்றிய ஆரம்ப உரையின் தமிழாக்கத்தின் 4ம் பகுதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது. இத்துடன் இது மு றுப் பெறுகிறது.

# தொழிலாள வர்க்கத்திற்கே இறுதியில் வெற்றி!

இந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் துப்பாக்கி முனையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டவர்கள் அல்லர்; அல்லது அவர்களை எங்கள் கூட்டங்களில் கலந்துகொள்ள இலவச லொறிகள் மூலமும், பஸ்கள் மூலமும் ஏற்றிவரவில்லை. அவர்கள் தாங்களாகவே வந்தவர்கள். எங்கள் அரசியல் கோட்பாடுகளில் ஆர்வம்கொண்டு வந்தவர்கள். ஒவ்வொரு நாளும் நாங்கள் முன்னேறிக் கொண்டிருந்தோம்.

## இளம் தொழிலாளர்கள் செவிசாய்ப்பு

ஆரம்ப நாட்களில் நகர்ப்புற தொழிலாள வர்க்கத்தினரிடையே நாங்கள் பலம் பெற்றிருக்கவில்லையென்பதை முன்பேயே கூறியிருக்கிறேன். ஆனால் 1971-ம் ஆண்டு நாங்கள் எங்கள் நடவடிக்கைகளை கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு விஸ்தரித்தோம். எங்கள் அரசியல் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளினால் நகர்ப்புறங்களிலும் எங்கள் தாக்கம் புலப்படத் தொடங்கியது. குறிப்பாக தொழிலாள வர்க்கத்தின் சில பகுதியினரிடையே இது பரவியது. ஆலைகளிலும் தொழிலிடங்களிலுமிருந்த இளம்தொழிலாளர்கள் எங்கள் கருத்துக்களுக்குச் செவிசாய்க்கத் தொடங்கினர். அப்போது தான் பழைய இடதுசாரிகள் எங்களால் அவர்கட்கு ஏற்படப்போகும் ஆபத்தை உணரத் தலைப்பட்டனர்.

## சமசமாஜிகளும், கம்யூனிஸ்டுகளும் கையாண்ட வழிகள்

எமக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவர்கள் ஆரம்பித்தனர். அவர்கள் கையாண்ட முதல் வழியாக, எங்களுக்கு சி.ஐ ஏ. ஏஜண்டுகள் என்றுபட்டம்சூட்டினர். ஆனால் இந்தத் தாக்குதல் தோல்வியடைந்தமையை நீங்கள் அறிவீர்கள். பின்னர் இரண்டாம் வழியைப் பின்பற்றினர்; இதனை விளக்க கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. சரத் முத்தேட்டுவேகமை கூறியதை எடுத்துக்கொள்ளலாம். 1970ம் ஆண்டு பிற்பகுதியில் இரத்தினபுரியில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் மாபெரும் கூட்டமொன்றில் பேசும்போது, 'சேகுவேரா'காரர்களை அடக்குமுறை செய்யும் வேலையை பொலிசாரிடம் விட்டுவிடக்கூடாது. அந்த வேலை ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் கடமையாயிருக்க வேண்டும்' என்று கூறினார். இதே காலகட்டத்தில், லங்கா சமசமாஜக் கட்சியினரும் எங்களால் அவர்கட்கு ஏற்பட்டுள்ள ஆபத்து பற்றி கலந்தாலோசித்தனர். அவர்களின் கட்சியினது அரசியல் குழுவினர் கூட்டத்தில், தங்கள் ஆதரவாளர்களை எங்களுக்கு எதிராக சரீர தாக்குதல்களை நடாத்துமாறு பணிப்புரை விடுக்கப்பட்டது. இக் கைங்கரியத்தை செய்வதற்கு அவர்கள் பொலிசாரின் பாதுகாப்பையும் தேடினர். இந்த விஷயங்களை எங்கள் பொதுக் கூட்டங்களில் நான் குறிப்பிட்டுள்ளேன்

இந்த இரண்டாம் வழிவகையும் வெற்றிபெறத் தவறிய போது அவர்கள் விஷயத்தை அமைச்சரவையில் விவாதித்தனர். ஒரு பலம் வாய்ந்த அரசியல் சக்தியாக ஜனதா விமுக்தி பெரமுன வளர்ச்சியடைவதைத் தடுக்க எங்களை நசுக்கிவிடும் வழிவகைகளை ஆராய்ந்தனர். சமீபத்தில் பிரதம மந்திரி விடுத்த அறிக்கையின்படி எங்கள் இயக்கத்தைத் தடைசெய்தால் நாங்கள் பிரபல்யம் அடைந்துவிடுவோம் என்பதற்காக, எங்கள் இயக்கத்தை தடை செய்வதில்லை என்று தீர்மானித்தனராம். ஒரு மார்க்ஸிஸ கட்சியைத் தடை செய்வதால் எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை என்பதை முதலாளித்துவ வர்க்கம் நன்கு அறியும். அதனால் எங்களை தடை செய்தாலும் நாங்கள் வேறு ஒரு பெயரில் எங்கள் அரசியல் நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்துவோம் என்று அரசாங்கம் சந்தேகித்தது. அதனால் அவர்கள் வேறு ஒரு மாற்றுத்திட்டத்தைக் கையாண்டனர். அந்தத்திட்டம் இன்னமும் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

நாடு ஒரு பெரும் பொருளாதார சிக்கலை எதிர்நோக்குகிறது என்பதை நீங்கள் நன்கறிவீர்கள். இதனை எவரும் ஏற்றுக்கொள்வர். ஆனால் அந்த நெருக்கடி இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இதே பிரச்சனை 1971-ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ம்தேதியும்இருந்தது. அதற்கு முன்பும் காணப்பட்டது. அந்த நேரத்தில் அரசாங்கம் இன்று செய்வது போல தன்மனம் போனபடி மக்கள் மீது மேலும் பளுவை சுமத்த விரும்பவில்லை. அத்தகைய நடவடிக்கைகளை எதிர்த்து மக்களை தூண்டிவிட, அவற்றிற்கு எதிராக தங்கள் ஆட்சேபனைகளைத் தெரிவிக்க ஒரு புரட்சிவாத சக்தி இருந்ததுதான் காரணம். கடும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்னால், எங்கள் இயக்கத்தை ஒழிப்பது அவசியமாயிற்று. அதற்கேற்றவாறு, அவர்கள் தங்கள் திட்டத்தையும் வகுத்தனர்.

## இரகஸியப் பொலீஸார்

1971-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பின்னர் நிலைமை உச்ச கட்டத்தை அடைந்தது. முன்னாள் போலீஸ் மா அதிபரான திரு. எஸ். ஏ. திசாநாயக்கா பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் மேலதிக நிரந்தர செயலாளராக 1971 மார்ச் மாதம் முதலாம் தேதி முதல் நியமிக்கப்பட்டார். இதற்கு மிக முன்பதாகவே சி. ஐ டி. பிரிவினர், ஜனத்தா விமுக்தி பெரமுனையின் நடவடிக்கைகள் பற்றி இரகசியப் போலீஸ் முழு அளவில் விசாரணைகள் தொடங்கினர். இதற்காக ஒரு தனிப்பிரிவே அமைக்கப்பட்டது. அப்பிரிவு நாட்டின் பல பகுதிகளிலும் எமது தோழர்களின் இருப்பிடங்கள்மீது திடீர் சோதனைகளை மேற்கொண்டதன் மூலமும் அவர்களைக் கைது செய்ததன் மூலமும் ஏப்ரல் 1971 அளவில் போதிய தகவல்களைச் சேகரித்துக்கொண்டது. அவர்கள் தங்கள் ஏஜண்டுகளையும் ஜனதா விமுக்தி பெரமுனயின் அங்கத்தவர்களாக புகுத்தினர்.

## இராணுவ நடவடிக்கைகளும் அவசரகால நிலைமை பிரகடனமும்

1971-ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் தேதியளவில் எங்கள் நடவடிக்கைகள் பற்றி அறிந்துகொள்வதற்காக நாட்டின் பல பாகங்களிலும் இராணுவப் பிரிவுகளைப் பயன்படுத்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. இந்த நடவடிக்கைகள் பற்றிய பத்திரிகைச் செய்திகள் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கும் ஐந்தாம் திகதிக்குமிடையில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. அதே வாரத்தில் இராணுவ உத்தியோகத்தர்களுக்கு போலீஸ் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. அபாய அறிவிப்பு தெரிவிக்கப்பட்டதும் தங்களைத் தயார்படுத்த பொலிசாருக்கு எவ்வளவு நேரம் எடுக்கும் என்பதனை பரிசோதிக்க, மார்ச் 5ம் திகதி ஒரு திட்டம் ஒத்திகை பார்க்கப்பட்டது. ஒரு நெருக்கடி நிலையில் அவர்களின் தயார் நிலையைப் பரிசோதிக்கவே இந்த ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது. இது கொழும்பிலும், நாட்டின் வேறு பல பாகங்களிலும் நடாத்தப்பட்டன. 6-ம் திகதி அமெரிக்க தூதுவராலயம் மீது ஒரு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. புரட்சிகர இயக்கத்தை முறியடிக்க இதனை ஒரு சாக்காகாகப் பயன்படுத்த வாய்ப்பு ஏற்பட்டது. மார்ச் மாதம் 13-ம் திகதி நான் கைது செய்யப்பட்டேன். மார்ச் மாதம் 16-ம் திகதி அவசரகால நிலைமை பிரகடனஞ் செய்யப்பட்டது. 1971 ஏப்ரல் மாதம் 5ம் திகதிக்கு முன்பதாக 4,098 பேர் கைது செய்யப்பட்டனர்.

தொழிலாள வர்க்கத்தினரால் அதிகாரத்தை கைப்பற்றவோ ஒரு ஆயுதப் போராட்டத்தை நடாத்தவோ வேண்டிய புரட்சிக்கான சூழ்நிலை 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இருந்திருக்கவில்லை. இது என் கருத்தாகும். புரட்சிக்கு சாதகமான அகச்சூழ்நிலைகளும் புறச்சூழ்நிலைகளும் இல்லாது ஒரு ஆயுதப் போராட்டத்திற்கு இடமில்லை. அரசு அதிகாரத்தைக் கைப்பற்ற ஒரு ஆயுதப்போராட்டத்தை ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலை இருந்திருக்கவில்லையென்பதே என் கருத்தாகும். இதற்கான புறச்சூழ்நிலைகள் சாதகமானவைகளாக மாறிக்கொண்டிருந்தன. ஆயினும் அவை சரியாக முதிர்ச்சியடையவில்லை. மக்களுக்கு புரட்சி செய்வதைவிட வேறுவழியில்லைஎன்ற கட்டம் அப்போது ஏற்பட்டிருக்கவில்லை. ஆனாலும் இன்று போலவே அன்றும் சமுதாயம் புரட்சிப்பாதையில் சென்றுகொண்டிருந்தது என்பது உண்மை. புரட்சிக்கு ஏதுவான அகச் சூழ்நிலைகளும் இருந்திருக்கவில்லை. மக்களின் ஆதரவைப் பெற்றதும், போராட்டப் பாதையில் வழி நடத்திச் செல்லக்கூடியதுமான ஒரு திடமான புரட்சிகர கட்சி இருந்திருக்கவில்லை. ஜனதா விமுக்தி பெரமுனை வளர்ந்து கொண்டிருந்தது. அந்த இலக்கை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. ஆயினும் அது முழு வளர்ச்சி அடைந்திருக்கவில்லை. அந்நேரத்தில் ஜனதா விமுக்தி பெரமுனையை வட, கிழக்கு மாகாணங்களிலும், தோட்டப்பகுதிகளிலும் ஒரு அரசியல் சக்தியாக நிறுவ நாங்கள் தவறிவிட்டோம்.

வேறு வார்த்தைகளினால் கூறுவதானால், மக்கள் ஜனதா விமுக்தி பெரமுனையை அரசாங்கத்திற்குப் பதிலானதாகக் கருதி, அதன் தலைமையை ஏற்று, அதன் கொடியின் கீழ் வர்க்க போராட்டத்திற்கு ஒன்று திரளக்கூடிய வகையில் கருதக்கூடிய நிலைக்கு அது வளர்ச்சியடைந்திருக்கவில்லை. எங்கள் மார்க்ஸிஸ சித்தாந்தப்படி, ஒரு புரட்சி- அதாவது ஆயுதப் போராட்டம் மக்களுக்குத் தெரியாமல் அவர்கள் முதுகுகளுக்குப் பின்னால் நடைபெறக்கூடிய ஒன்றில்லை.

இந்த நாட்டிலுள்ள புரட்சிவாத இயக்கங்களை, குறிப்பாக ஜனத்தா விமுக்தி பெரமுனையை நசுக்கிவிட வேண்டிய தேவை ஆளும் வர்க்கத்திற்கு 1971-ம் ஆண்டு மார்ச் மாதம் ஏற்பட்டது. அதன்படியே அவர்கள் நடத்தனர். அதன் விளைவே ஏப்ரல் நிகழ்ச்சிகள். இதனை, எதிர் - புரட்சிவாத நடவடிக்கைகளின் தூண்டுதலினால் ஏற்பட்ட சம்பவம் என்றே நான் அர்த்தம் புரிய விழைகின்றேன்.

தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில் ஏப்ரல் நிகழ்ச்சி முதலாளி வர்க்கம், தொடர்ந்தும் மேன்மேலும்தொழிலாளவர்க்கத்தினால் ஆபத்தைஎதிர்நோக்கும் வர்க்கமாகத் தன்னை அடையாளம் கண்டுகொண்ட ஒரு சம்பவமாகவேகருதுகிறேன். தொழிலாள வர்க்கத்திடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள இந்த நாட்டின் முதலாளித்துவ வர்க்கம் மேற்கொண்ட எதிர்-புரட்சிவாத நடவடிக்கையின் விளைவே இதுவாகும். அந்த நடவடிக்கையின் ஒரு பகுதியே ஜனத்தா விமுக்தி பெரமுனை இன்று தடைசெய்யப்பட்டிருப்பது.

## கொலைகளும் சிறைப்படுத்தலும்

இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்த, ஜனத்தா விமுக்தி பெரமுனையுடன் தொடர்பு கொண்டிருந்தபெருந்தொகையானோர் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஜனத்தா விமுக்தி பெரமுனையுடன் தொடர்புகொண்டிருந்த பெருந்தொகையானோரும், எவ்வித் தொடர்புமில்லாதவர்களும் கூட இன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். பொதுவாக புரட்சிகர இயக்கத்தையும், குறிப்பாக ஜனத்தா விமுக்திபெரமுனையையும் தொடர்ந்தும் அடக்குமுறை செய்ய இயலுமானதாகிவிட்டது.

முடிவாக இதனையே நான் கூற விரும்புகிறேன். முதலாளி வர்க்கம் இரு தற்காலிக வெற்றியைப் பெற்றுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இதனை தொழிலாள வர்க்கத்தின் தோல்வியாகக் கருதவில்லை. இது தொழிலாள வர்க்கத்தின் பெரியதொரு பின்வாங்குதல், ஆம். இது ஒரு பெரிய பின்வாங்கல். ஒரு பின்வாங்கல் தோல்வியாகமாட்டாது. அது மீண்டும் சுதாகரித்துக் கொண்டு வெற்றியை நோக்கி நடைபோட உதவும் ஒரு கட்டமேயாகும். எந்த புரட்சி இயக்கமும் உடனேயே, நேரடியாக வெற்றியடைந்ததில்லை. புரட்சி இயக்கங்களில் முன்னேற்றங்களைத் தொடர்ந்து, பின்வாங்கல்களும் இடம்பெறுவது இயல்பு. இதுதான் எங்களை இன்று எதிர்நோக்கியுள்ள நிலைமை. இந்த நிலையிலிருந்துதான்

5ம் பக்கம் பார்க்க

**விஜேவீரவை விடுதலை செய்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகால நிலைமையை அமுலாக்குவதில் நியாயமில்லை

நாட்டின் பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான தொழிற்சங்கங்கள் பல 1976 ஒக்டோபர் 28ந் திகதி ஒன்றுகூடி அவசரகால நிலைமையை உடனடியாக நீக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோருவதென்று தீர்மானித்தன.

இத் தீர்மானத்திற்கிணங்க பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவிற்கு 1976 ஒக்டோபர் 29ந் திகதி ஒன்பது தொழிற் சங்கங்களால் கையெழுத்திட்டு அனுப்பப்பட்ட கடிதத்தின் முழு வாசகம் பின்வருமாறு.

**தங்களது அரசாங்கம் பதவி வகித்துள்ள எழுபத்தேழு மாதங்களாக அதனல் அமுலில் வைக்கப்பட்டுள்ள அவசரகால நிலைமை தொடர்பாக, 1976 ஒக்டோபர் 28ந் திகதி நடைபெற்ற கீழ்குறிப்பிட்ட தொழிற்சங்கஸ்தாபன்ங்களின் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றின் வாசகத்தை நாம் கீழே தருகின்றோம்.**

''அவசரகால நிலைமையைத் தொடர்ந்து நீடித்துக் கொண்டு அதன்கீழ் வேலை நிறுத்த உரிமையுட்பட ஜனநாயக உரிமைகளையும் குடியியல் சுதந்திரங்களையும் நசுக்குவதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு நியாயமில்லையென்று 1976 ஒக்டோபர் 28ந் திகதி கொழும்பில் நடைபெற்ற தொழிற் சங்க ஸ்தாபனங்களின் இந்த மகாநாடு கருதுகின்றது

இதற்கிணங்க, தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலைமை சட்டவிரோதமானதென்றே அல்லது இல்லையென்றே உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினலும், அவசரகால நிலைமையை உடனடியாக நீக்கவேண்டுமென அரசாங்கத்தை இம் மகாநாடு கோருகின்றது.

அவசரகால நிலைமையின் கீழ், வேலையினின்றும் நீக்கப்பட்ட அல்லது தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட சகலரையும் மீண்டும் வேலையில் அமர்த்துவதற்கும், காவலில் வைக்கப்பட்டுள்ள சகலரையும் விடுதலை செய்வதற்கும் மற்றும் பழிவாங்குதல்களுக்கு ஆளானேர்களுக்கு தகுந்த நிவாரணம் வழங்குவதற்கும் இம் மகாநாடு கோருகின்றது.''

இலங்கை வங்கி ஊழியர் சங்கம், இலங்கை தொழிற் சங்கங்களின் மத்திய சபை, இலங்கை தோட்டச் சேவையாளர் சங்கம், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம், இலங்கை தொழிற் சங்க சம்மேளனம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அரச சேவை தொழில்நுட்ப உத்தியோகத்தர் தொழிற் சங்க சம்மேளனம், தமிழ் தொழிற் சங்கக் கூட்டணி மற்றும் அஞ்சல் தந்தி தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கம் ஆகியன இக்கடிதத்தில் கையெழுத்திட்டன.

# தொழிலாள வர்க்கமும் ஜப்பானிய முதலாளித்துவமும்

**1951**ம் ஆண்டு வரை அமெரிக்கக் காலனியாக விருந்த ஜப்பான் அந்த நிலையிலிருந்து விடுதலை அடைந்த பின்னர் மிகத்திடமான பொருளாதார நிலையை பெற்றிருந்தது. விசேடமாகக் கொரிய - ஜப்பானிய யுத்தத்திற்குப் பின்னர் இப்பொருளாதார நிலை ஏற்பட்டது. இதற்கிடையே தொழிலாள வர்க்கத்துள் சீர்திருத்தவாத குணங்களுடன் தொழிற்சங்கங்கள் அதீத வளர்ச்சி அடைந்தன. முந்திய கட்டுரைகளில் விபரித்திருந்தபடி 1949 - 50ல் ஏற்பட்ட தொழிலாளர் போராட்டங்கள் படுதோல்வி அடைந்ததினல் புதிய தொழிற்சங்கத் தலைவர்கள் நடுநிலைவாதிகளாகவோ, இடதுசாரிச் சீர்திருத்தவாதிகளாகவோ காணப்பட்டனர். ஆயினும், மார்க்ஸீயத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டது ஒரு விசேட விடயமாகக் கருதப்படவேண்டும். ஜப்பான் ஏகாதிபத்தியம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட சோஷலிஸ்ட் கட்சி மிக வலிமை பெறுவதற்கு சோகியோ தொழிற் சங்க சம்மேளனத்தில் வளர்ச்சியடைந்திருந்த அதிகாரவாதம் காரணமாக இருந்தது. இந்த சோஷலிஸ்ட் கட்சியுடன் தொடர்பு கொண்டிருந்த கணிசமான தொகையினர் வலதுசாரிகளாகியதுடன் கடந்த கட்டுரையில் விளக்கப்பட்டிருந்தபடி ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சிமீது வெறுப்படைந்திருந்த தொழிலாளர்கள் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் வகித்த பதவிகளுக்கு ''சோஹியோ'' மூலமாக முன்வந்தவர்களை நியமித்ததே அந்த நிலைக்குக் காரணமாகும். ''சோஹியோ'' ஸ்தாபனத்திற்குள் ஏற்பட்ட நெருக்கடியினல் நடுநிலையாளர்கள் இடதுசாரிசார்பானவர்கள் ஆகிய பெரும்பான்மையோர் அமெரிக்க முதலாளித்துவத்திற்கு அனுதாபம் காட்டும் நிலையை மேற்கொண்டதால் 1951ல் சோஷலிஸ்ட் கட்சியானது இரண்டாகப் பிளவுபட்டது. இப் பிளவின் காரணமாக இடதுசாரி நடுநிலையாளர் என்று கூறப்பட்டவர்கள் ''சோஹியோ ஸ்தாபனத்துடன் மிகவும் நெருங்கிய உறவு வைத்திருந்தனர்.

1951ல் உண்டாகிய பிளவு பின்னர் மீண்டும் ஒரு முறை 1954ல் ஒன்றிணைந்தவுடன், இடதுசாரிப் பகுதியினர் அதிகமாகச் சம்பந்தப்பட்டிருந்ததால் ''சோஹியோ'' வின் நிலை பெருமளவுக்கு இடதுபக்கம் சாய்ந்தது. ஆனல் 1959ல் ஏற்பட்ட பிளவினல் சோஷலிஸ்ட் கட்சிக்குள் வலதுசாரிகள் மிகவும் குறைந்து எஞ்சியிருந்ததின் காரணமாக 1960 ஆகும் போது 'சோஹியோ' பெரும்பான்மை தொழிலாளர்களைக் கொண்ட ஸ்தாபனமாக விளங்கியது. வலதுசாரிகளுடைய ஸ்தாபனமான 'சென்ட்ரோ' வளர்ச்சியடையாததுடன் பெரிய தொழிற்சாலைகளிலும், அரச துறைகளிலுமுள்ள தொழிலாளர்கள் ''சோஹியோ'' ஸ்தாபனத்துடன் இணைந்த தொழிற்சங்கங்களில் சேர்ந்தார்கள்.

பலம்வாய்ந்த நிலையிலிருந்த ''சோஹியோ'' ஸ்தாபனத்துடன் சம்பந்தப்பட்டிருந்த சில பிரிவுகளின் தொழிலாளர்கள் ஆரம்பித்த போராட்டங்கள் தனிப்பட்ட முதலாளிகளாலும் ஜப்பான் அரசினலும் மோசமாகத் தாக்கப்பட்டன. உருக்குத் தொழிற்சாலைத் தொழிலாளர்களால் 1957ல் நடாத்தப்பட்ட வேலைநிறுத்தம் தனிப்பட்ட முதலாளிகளாலும் அரசினலும் சின்னபின்னப் படுத்தப்பட்டமையினலும், 1958ல் ஏற்பட்ட ஆசிரியர்களின் வேலை நிறுத்தம், 1960ல் ஏற்பட்ட நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் ஆகிய சக்தியான வேலை நிறுத்தங்களும் சின்னபின்னப்படுத்தப்பட்டமையினலும் ''சோஹியோ'' ஸ்தாபனம் மீண்டும் பின்னடையும் நிலைக்குத் தள்ளப்பட்டது. 1950 பிற்கூறிலிருந்து ஜப்பான் முதலாளித்துவ வர்க்கம் அடைந்த அதிக வளர்ச்சியினல் ஜப்பான் தொழிலாள வர்க்கம் விரிவடைவதற்கான வசதிகளை அது அளித்ததெனினும், தொழிற்சங்க ஸ்தாபனங்கள் மீது காட்டப்பட்ட விரோத மனப்பான்மையால் 1961 முதல் 68 வரை தொழிற்சங்க இயக்கத்தில் மீண்டும் ஸ்தம்பிதநிலை காணப்பட்டது. இந்நிலைமை ஏற்பட்டதற்கான காரணம், தனிப்பட்ட முதலாளிகளும், அரசும் காட்டிய விரோத மனப்பான்மையும், போராட்டங்கள் சின்னபின்னப்படுத்தப்பட்டமையும் மட்டுமல்லாது தொழிற்சங்க அதிகாரவாதம் அதிக வளர்ச்சியடைந்திருந்தமையும், வலதுசாரித் தொழிற்சங்கங்கள் தோன்றியமையும், முன்னைய கட்டுரைகளில் விபரித்தபடி உபரித் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பினல் ஏற்பட்ட தாக்கமும் காரணமாயிருந்தன என்பதைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

1951 முதல் 68 வரையிலான காலகட்டத்தில் கப்பற்றெழில் இரசாயனத்தொழில், கனரகத் தொழில் ஆதியன அநேகமாகத் தனியார் துறையில் முன்னேற்றம் அடைந்ததுடன் ''சோஹியோ''வைச் சாராத வலதுசாரித் தொழிற்சங்கங்கள் அந்ததுறைகளில் பலம்வாய்ந்த நிலையை அடைந்தன. இன்றும் ''சோஹியோ'' தொழிற்சங்க சம்மேளனம் தனியார் துறைகளைவிட அரச துறையில் பலம் வாய்ந்ததாய் இருப்பதுடன் தனியார் துறையை வலதுசாரித் தொழிற் சங்கங்களே தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்துள்ளன.

1968 – 69க் கிடையே ஏற்பட்ட மாணவர் எழுச்சியினல் ஜப்பான் தொழிலாள வர்க்கத்தில் நிலவிய மௌனம் நீங்கியதுடன் தொழிலாள வர்க்கம் புத்துயிர் பெற்றது. தீவிரவாத மாணவர் பிரிவுகள் ஜப்பான் முதலாளித்துவத்திற்கும், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக நடாத்திவந்த கிளர்ச்சி இயக்கம் தொழிலாளர்கள் மத்தியில் புத்துணர்ச்சியைத் தூண்டுவதில் வெற்றி கண்டதுடன், ஜப்பான் முதலாளித்துவம் எதிர் நோக்கிய நெருக்கடியினல் எழுந்த புதிய உணர்வுகளினல் விழிப்படைந்திருந்த தொழிலாளர் போராளிகளினல் 1971 – 73 – 74ம் வருடங்களில் நடாத்தப்பட்ட பிரமாண்டமான வேலை நிறுத்தங்கள், ஜப்பான் முதலாளித்துவத்தினல் ஒடுக்கப்பட முடியாதவாறு கிளர்ந்தெழுந்தன. இக் காலகட்டத்தில் ஜப்பான் முதலாளித்துவம் வலதுசாரித் தொழிற் சங்கங்களை ஒழுங்கமைத்தது.

ஜப்பான் தொழிலாள வர்க்கத்தின் தொகையானது இன்று ஒரு கோடி இருபது இலட்சமாகும். அதில் 45 இலட்சம் ''சோஹியோ'' ஸ்தாபனத்திலும் 20 இலட்சம் 'டொமெய்' ஸ்தாபனத்திலும் 15 இலட்சம் ''சூரிட்சு'' என்ற ஸ்தாபனத்திலும் சுமார் எழுபதாயிரம் தொழிலாளர்கள் ''சின் ஸன் பட்சு'' என்ற ஸ்தாபனத்திலும் ஒழுங்கமைந்துள்ளனர். ஜப்பானில் மிகவும் முன்னேற்றமடைந்த கைத்தொழிலான மின்சார உபகரணங்கள், கணக்கிடும் இயந்திரங்கள், ஒலிப்பதிவு இயந்திரங்கள், வானெ

5ம் பக்கம் பார்க்க

## திடீர் வேலைநிறுத்தம் தீர்த்துவைக்கப்பட்டது.

வலி. தென்மேற்கு தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் தோன்றிய காலந்தொட்டு அதன் வரலாற்றிலேயே கண்டிராத வகையில் அங்குள்ள தொழிலாளர்கள் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் சேர்ந்து அதிக நாட்கள் செல்லமுன் திடீரென வேலைநிறுத்தத்தில் ஞதித்து நிர்வாகத்தைத் தமது நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்க வைத்தனர் என்று 'ஆரம்பத்'திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கத்தின் பதில் முகாமையாளரைப் பதவியிறக்கம் செய்யவும், அதே நேரத்தில் கிளைச் சங்கத்தின் தலைவரைச் சங்கானை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்திற்கு இடமாற்றம் செய்து அங்கிருந்து காசாளர் ஒருவருக்குப் பதில் முகாமையாளர் பதவியுயர்வு கொடுப்பதற்கும் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளரின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படவிருந்த நடவடிக்கையை எதிர்த்தே இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் அங்கத்தவர் அனைவரும் 4-11-76ல் திடீர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட நேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தம் உற்சாகமாக நடந்துகொண்டிருக்கையில் தலைமைக் காரியாலயக் கூட்டுறவுப் பரிசோதகர் உடனடியாகத் தலையிட்டு சங்கத் தலைவர், செயலாளர் மற்றும் உப தலைவர் ஆகியோருடனும் சங்கப்பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து 5-11-76ல் நிர்வாக சபைக் கூட்டத்தைக் கூட்டிப் பிரச்சினையை மறுபரிசீலனை செய்யுமாறு அவர் நிர்வாக சபைக்கு அளித்த ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டதால் வேலைநிறுத்தம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டதாம்.

இந்த ஏற்பாட்டிற்கிணங்க நவம்பர் 5ந் திகதி நடந்த சங்கத்தின் கோரிக்கைகளுக்குச் சார்பான தீர்வு கிடைத்ததால் வேலைநிறுத்தம் முற்றாகக் கைவிடப்பட்டதென்று கிளையிலிருந்து கிடைத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசரகால நிலைமையை ஒழிக்க

# பதினொரு சங்கங்களின் பகிரங்கக் கோரிக்கை!

அவசரகால நிலைமை ஒழிக்கப்படவேண்டியது ஒரு சட்டப் பிரச்சினை அல்லவேயன்றி மக்களின் உரிமைகள் சம்பந்தமான பிரச்சினை என்று, நவம்பர் 18ம் திகதி ஹைட்பாக்கில் 11 தொழிற்சங்கங்களைக் கூட்டாக நடாத்திய கூட்டத்தில் உரையாற்றும் போது தோழர் டாலாதம்பு கூறினர்.

இன்று இந்நாட்டில் மக்களுக்கு சுதந்திரம் இல்லையென்றும்-பந்தம்பிடிக்காமலும், அடிவருடாமலும் இருப்பவர்களுக்கு கிடைப்பது அடியும் துப்பாக்கி வெடியும்தான் என்றும் அவர் கூறினர். முதலாளித்துவ அரசு இந்தக் கொள்கையைக் கைவிடாவிட்டால் மக்கள் தங்களின் சுதந்திரத்தைப் பெறுவதற்காக நடாத்தப்படும் மிகப் பெரிய மக்கள் இயக்கத்தின் மூலமாகவே அதற்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என்று தோழர் பாலா கூறினர்,

அன்றைய கூட்டத்திற்கு மழையையும் பொருட்படுத்தாது மாபெரும் ஜனத்திரள் கூடியிருந்தது. இலங்கை வர்த்தகஊழியர் சங்கம் உட்பட 11 தொழிற்சங்கங்கள் இணைந்து அவசரகால நிலைமையை உடனடியாக அகற்றுவதற்கு அரசாங்கத்தை வலியுறுத்துவதற்காக நடாத்தப்படவுள்ள கூட்டத்தொடரின் முதல் கட்டமாக இக்கூட்டம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. நவம்பர் 12ம் திகதி பேராதனை பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு மாணவன் கொல்லப்படுவதற்கும் இன்னும் பலர் காயமுறுவதற்கும் காரணமாக அமைந்த பொலீஸ் வெடிவைத்துத் தாக்கிய சம்பவத்திற்கு இக்கூட்டத்தில் வன்மையான கண்டனம் தெரிவிக்கப்பட்டது. பேராதனை பல்கலைக்கழக வளாக மாணவர் ஒருவரால் பேராதனையில் நடைபெற்ற இந்த பொலீஸ் பயங்கரவாத சம்பவம் பற்றி அக்கூட்டத்தில் விளக்கப்பட்டது.

பொலீஸ் பயங்கரவாதத்தைப் பற்றி தனது உரையில் விளக்கமாக விபரித்த தோழர் பாலாதம்பு இந்த அடக்குமுறையானது, வெள்ளவத்தை நெசவு ஆலையில் ஜனவரி 2ம் திகதி தன்னுடன் கூடியிருந்த தொழிலாளர்களுக்கு வெடிவைப்பதாக பொலீசார் பயமுறுத்திய விதத்தையும், அதன் பின் மே 27ம் திகதி ஹைட் பார்க் கூட்டத்திற்குப் போய்க் கொண்டிருந்த இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் அங்கத்தவர்களை பொலீசார் தாக்கிய விதத்தையும் நினைவுபடுத்தினர்.

ஆயுதம் தாங்கிய பொலிசார் வெடிவைத்தாலும், வெடிவைக்காவிட்டாலும் அவர்கள் வருவது ஆட்களைப் பயமுறுத்தும் நோக்கத்துடனேயாகும். பயங்கரவாதம் என்பது அதைத்தான். இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் அன்று கூறியபடி அரசு வேலைநிறுத்தங்களுக்கு தடைவிதித்தது டன், அவசரகால நிலைமையை 1971 மார்ச் 16ம் திகதி பிரகடனப்படுத்தியது சகல மக்கள் இயக்கங்களையும் இல்லாதொழிப்பதற்காகவேயாகும்.

அத்துடன் பழைய இடதுசாரி இயக்கம் திரிபுபடுத்தப்பட்டு முதலாளித்துவ அரசுக்கு ஒத்துழைப்பதன் மூலம் அந்த பழைய இடது வலதாக மாறியது மக்களின் பங்கீட்டரிசியை வெட்டியதும் இவ்விதமாகத்தான்-சீனி, மாவு, பங்கீடுகளில் கைவைத்ததும், அத்தியாவசியமான பொருட்களின் விலைகளை அதிகரித்ததும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை கீழ் நிலைக்கு கொண்டுவந்ததும் இவ்வாறேயாகும்.

''அவசரகால நிலைமையை ஏற்படுத்துவதற்கு தனது முழு ஆதரவையும் அளித்த ஐ.தே. கட்சியினர் தற்பொழுது பொதுத்தேர்தலை எதிர்பார்த்துக்கொண்டு ஜனநாயகத்தைப்பற்றி கூக்குரலிடுகிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி அன்றும் இன்றும் அவசரகால நிலைமையரசுக்கு ஒத்துழைப்பு நல்கியது. லங்கா சமசமாஜக் கட்சியும் அன்று அதற்கு ஒத்துழைப்பு நல்கியது. மக்களுக்கு வேண்டியது இந்த அடக்குமுறைச் சட்டத்தைத் தளர்த்திவிடுவது அல்ல. மக்களுக்கு வேண்டியது பூரண சுதந்திரம்.

பல்கலைக்கழகத்தில் பொலீஸார் நடத்திய வேட்டையைப் பற்றிக் கூறிய அங்குள்ள மாணவர் பேரவையின் செயற்குழுவின் சார்பில் உரையாற்றிய தோழர் டபிள்யு. எம். கருணரத்ன, பேராதனையில் நவம்பர் 12ந் திகதி நடைபெற்ற சம்பவம் தனி ஒரு பொலீஸ்காரரால் ஏற்பட்டது [illegible] முதலாளித்துவ அடக்குமுறையின் ஒரு பாகமாகும்'' என்று கூறினர்.



நவம்பர் 16ந் திகதி ஹைட் பார்க்கில் நடந்த கூட்டத்தில் மழையையும் பொருட்படுத்தாது ஜனத்திரள் கூடியிருந்தது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அஞ்சல் தந்தி தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கத்தின் யூ. எல். பஸில் டீ. சில்வா, இலங்கை தொழிற்சங்க மத்திய சபையின் தினேஷ் குணவர்த்தன - சுதந்திர துறைமுகத் தொழிலாளர் சங்கத்தின் அன்ரனி மாசலஸ் இலங்கை அரசசேவை தொழில்நுட்ப உத்தியோகத்தர் தொழிற்சங்க சம்மேளனத்தின் கே. பி. பியசேன, இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் சாந்தி அபேசேகர, இலங்கை வங்கி ஊழியர் சங்

6ம் பக்கம் பார்க்க

### 1976 நவம்பர் 18ந் திகதி நடைபெற்ற தொழிற் சங்கங்களினதும் மாணவர் சங்கங்களினதும் கூட்டுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

குறைந்தபட்சம் ஒரு மாணவன் கொல்லப்படுவதற்கும் வேறு பலர் காயம் உறுவதற்கும் காரணமாய் அமைந்த, அண்மையில் பேராதனை வளாகத்தில் 1976 நவம்பர் 12ந் திகதி நடைபெற்ற பயங்கரவாதச் செயல் உட்பட மக்களுக்கு எதிராகப் பொலிஸார் நடாத்தும் பயங்கரவாத நடவடிக்கையைக் கண்டிப்பதற்காக நாடெங்கிலும் 1976 நவம்பர் 26ம் திகதி வேலையையும் மற்றும் சகல சாதாரண கருமங்களையும் நிறுத்துவதற்கு அழைப்புவிடுக்கவும் பங்குபற்றவும் வேண்டுமெனத் தொழிற் சங்கங்களினதும் மாணவர் சங்கங்களினதும் பிரதிநிதிகளின் இக் கூட்டுக் கூட்டம் தீர்மானிக்கின்றது. அவசரகால நிலைமையை உடனடியாக ஒழிக்கவேண்டுமென்ற ஒன்றுபட்ட கோரிக்கையின் அடையாளமாகவும் நவம்பர் 26ந் திகதி நடைபெறும் மாபெரும் அடையாள வேலைநிறுத்தம் கருதப்படவேண்டுமென்று மேலும் இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

## ஆணைக்குழு....

3ம் பக்கத் தொடர்ச்சி

நான் இன்று உங்கள் முன்னால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தனிப்பட்ட நலனிற்காக எனது கொள்கைகளை நான் இங்கு எடுத்தியம்பவில்லை. நான் கவலைகொள்ளாத ஒரு மார்க்ஸியவாதியாக நிற்கிறேன். இங்கே நான் போராடுவது மார்க்ஸிய கொள்கைகளுக்காக. எனக்காகவல்ல. ஏனெனில் ஒரு புரட்சிவாத மார்க்ஸியவாதி ஆன எனக்கு அதைவிடப் பாதுகாப்பதற்கு வேறு எதுவுமில்லை.

முதலாளி வர்க்கம் எதைத் தான் எதிர்பார்த்திருந்தாலும், ஏப்பரல் நிகழ்ச்சிகளின் இறுதி முடிவு, ஒரு புரட்சிகரக் கவிஞன் கூறியிருப்பது போல, ஏற்கனவே தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மண்ணில் சிதறிய மலரினைப்
பாரும்
வாடி வதங்கிக் கிடக்கிறதே
விண்ணில் வீசிய வாசனை
தொடரும்
ஓடி ஒழியாமல் நிலைத்திடுமே
இனிமை யாவும் உயர்ந்து
உயர்ந்து
எங்கும் நறுமணம் வீசிடுமே
மகிமை காத்திட மலர்ந்து
மலர்ந்து
பொங்கும் மொட்டுகள்
பலதாய் பெருகிடுமே!

அக் கவிஞன், தன் கருத்தை தெளிவாக இலகுவான வார்த்தைகளில் கூறுகிறான். புரட்சி மலர்கள் பூத்துவிட்டன, ஆயினும், அவை தரையில் வீழ்ந்து செத்துக்கிடக்கின்றன என்றுலும் அவற்றின் வாசனை இன்னமும் அடங்கவில்லை. அந்த வாசனையைக் கூட்டவும், அந் நோக்கத்திற்காகவும், வேறு மொட்டுகள் தொடர்ந்து மலரும். உண்மையிலே கனவான்களே! முதலாளித்துவ வர்க்கம் அதன் வெற்றியையிட்டு சந்தோஷமடைய உண்மையான காரணமில்லை. ஏனெனில் வர்க்கப் போராட்டத்தில் வெற்றி என்பது மாறி மாறி வரும். இறுதி வெற்றியை பாட்டாளி வர்க்கம் அடையும்வரை, இது நிகழும். அதுதான் எங்கள் நம்பிக்கை.

## தொழிலாள....

4ம் பக்கத் தொடர்ச்சி

லிக் கருவிகள் மற்றும் நுண்ணிய மின்சார உபகரணங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில், ஸ்தாபன ரீதியாகத் திரண்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை மட்டுமே 7 இலட்சமாகும்.

ஜப்பான் தொழிற்றுறையில் கிராம மட்டத்தில் செய்யப்படும் அலுவல்கள் கொஞ்சநஞ்சமல்ல. கிராமியத் தொழிலாளர்கள் 100 பேரெனக் கணக்கிட்டால் புடவை அலங்காரத் தொழிலிலும், தையற்றொழிலிலும், ஏறத்தாள 30 சத வீதமும் புடவைத் தொழிலில் சுமார் 22.9 சத வீதமும், அச்சுத் தொழிலில் 9 சத வீதமும், இறப்பர் பொருட்கள் உற்பத்தித் தொழிலில் 2.4 சத வீதமும். தோல் பொருள் உற்பத்தித் தொழிலில் 3 சத வீதமும், கடதாசி உற்பத்தித் தொழிலில் 5.4 சத வீதமும், மின் பொருள் உற்பத்தித் தொழிலில் 11.3 சத வீதமும் மற்றும் சிறு தொழில்களில் 16 சத வீதமும் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## தோழர் வேர்ணன்.....

2ம் பக்கத் தொடர்ச்சி

ஜயவீரவும் இம்முறை உபதலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தோழர் து. ஸ்ரீ பத்மநாதன் சங்கத்தின் பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் பி. ஸி. ஸி. ஸ்தாபனத்திலுள்ள சங்கத்தின் கிளையில் இணைச் செயலாளராக இருப்பதுடன் சங்கத்தின் நிறைவேற்று சபையிலும் முன்னரில் உறுப்பினராகவிருந்தார். முன்னைய பேராளர் மகாநாட்டில் உதவிப் பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்ட மக்லூட் ஸ்தாபனத்திலுள்ள சங்கத்தின் கிளையைச் சேர்ந்த தோழர் என். பி. டொன்வின்சன் அப்பதவிக்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

முன்னாள் உதவிச் செயலாளர்களாக விருந்த தோழர் எச். ஏ. செனவிரத்னவும், ஸி. ஐ. ஸி. ஸ்தாபனத்திலுள்ள சங்கத்தின் கிளைச் செயலாளர் தோழர் பிரான்சிஸ் டி அல்மேடாவும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலுள்ள சங்கத்தின் கிளைச் செயலாளர்தோழர் எம். யு. பூஸோவும் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

உதவிச் செயலாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டு முழுநேர பதவி வகிப்போராக முன்னர் நியமிக்கப்பட்டவர்களான தோழி மே விக்ரமசூரிய, தோழர்கள் எம். எஸ். ஜயக்கொடி மற்றும் எஸ். பி. எஸ் சமரவீர ஆகியோர்கள் சங்கத்தின் சட்டதிட்டங்களுக்கமைய தொடர்ந்தும் உதவிச் செயலாளர்களாகக் கடமையாற்றுவார்கள்.

கடந்த நவம்பர் 3ந் திகதி நடைபெற்ற சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் கீழ் குறிப்பிட்ட தோழர்கள் புதிய நிறைவேற்று சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

எச். பி. ஹரிஸ்சந்திர (முன்னாள் தலைவர்) எஸ். ஜீவராஜா (சங்கத்தின் முழுநேர ஊழியரும், முன்னாள் உறுப்பினரும்) ஜி. லெஸ்லி பெரேரா (பவர் கிளை - முன்னாள் உறுப்பினர்) ஆர். ஏ. மொரிஸன் (அட்கின்ஸ்பென்ஸ் கிளை - முன்னாள் உறுப்பினர்) டி. ஏ. நந்தசேன (பீ. ஸி. ஸி. கிளை - முன்னாள் உறுப்பினர்) ஆர். முருகையா (மக்லரன்ஸ் கிளை-புதிய உறுப்பினர்) பி. ஜி. பியதாச (லங்கா ஹைகொட்டிங் கிளை - புதிய உறுப்பினர்) டபிள்யு. ஜே. என. டி. ஜயவர்தன (சிங்கர் இண்டஸ்ட்ரீஸ் கிளை - புதிய உறுப்பினர்) பீ. ஏ. கே. ஜயநாம (கால்பேஸ் ஹோட்டல் கிளை - புதிய உறுப்பினர்) ஆர். லியனகே (துறைமுக (க. ச.) கூட்டுத்தாபன கிளை - புதிய உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசரகால நிலைமையை அகற்று!

# பதில்

# ஆரம்பம் இதுவா?



என்ன புலம்பல் இது அம்மையாரே?

''இந் நாட்டைவிட்டு வெளியே நான் சென்றிருந்த போது பேராதனை வளாகத்தில் நேர்ந்திருந்த ஒரு சம்பவத்தில் மாணவர் ஒருவர் உயிர் இழந்ததோடு ஏனையோர் சிலர் காயமுற்றுக் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.''

''இச்சம்பவம் நேரவேண்டி ஏற்பட்டுள்ளமையையிட்டு நான் துயருறுகின்றேன். ஏற்கனவே பிரகடனப்படுத்திய வாறு, தாமதத்தை இயன்றளவு தவிர்த்து, இவ்விடயம் பற்றி விசாரணை செய்வதற்கு ஒரு விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்படும்.''

1976 நவம்பர் 21ந் திகதி பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளின் பிரகாரம் இச் சம்பவத்தையிட்டு பிரதமர் கூறியது! என்ன?

''குழப்பநிலை!'' — துரதிருஸ்டவசமான சம்பவம்.''

''துயருறுகிறோம்''— ''ஆணைக்குழு நியமிக்கப்படும்.''

நவம்பர் 12ந் திகதி பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர் மீது பொலீசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். இடி இடித்தாற் போல அவர்கள் அடித்து உதைக்கப்பட்டு வெடி வைக்கப்பட்டதால் இளைஞர் ஒருவரின் உயிர் பறிக்கப்பட்டதுடன் இன்னும் பலர் காயமுற்றனர். இப்படி நடைபெற்றுல் இவை வெறும் குழம்பம்தான். யாருடைய குழப்பம்? பிரத்மரோ பொலீஸாரைப் பற்றி எதுவுமே கூறவில்லை.

வெடி வைக்கச் சென்ற பொலீஸாரைப் பற்றிப் பிரதமர் எதுவும் கூருதுவிட்டாலும், மாணவர்களைப் பற்றி நிறையக் கூறியக் கூறியுள்ளார்.

''1975 மே மாதம் 30ந் திகதியன்று செல்வி. ரூபா ரத்னசீலி என்னும் ஒரு பட்டதாரி மாணவி, குறித்த சில மாணவர்களின் தொந்தரவுகளைப் பொறுக்கமுடியாது இராமநாதன் மண்டபத்தின் மூன்றும் மாடியிலிருந்து கீழே விழவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானுர்?'' என்று பிரதமர் கூறியுள்ளார்.

அப்படியா! அப்படியென்றுல், மாணவர்கள்தான் தீயோர்! அவசரகால நிலைமையின் கீழ் அரசிஞல் விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்ட பொலீஸாரோ தீமை செய்யாதோர்!

அப்படியென்றுல், அவசரகால நிலைமையின் கீழ் பயன்படுத்தப்படும் பொலீஸாரின் துப்பாக்கிக் குழல்களை விட மாணவர்களின் குரல்கள் கொடியன! அந்த துப்பாக்கி முனைகளோ அவசரகாலச் சட்டத்தை விடக் கொடியன!

பொலீஸாரைப் பற்றியும் அவசரகால நிலைமையைப் பற்றியும் எதுவுமே கூருது, மாணவரைப் பற்றியும் அவர்களின் தீயசெயல்கள் பற்றியும் எடுத்துரைப்பது எதற்காக? பொலீஸாரினதும் அவசரகால நிலைமையினதும் தீமைகளை மூடி மறைப்பதற்காகவா?

பிரதமர், இழி சொற்கள் பற்றியும், இனத்துவேஷ சுலோகங்கள் பற்றியும் கூறியுள்ளார். இளம் மாணவர் ஒருவரின் உயிர் பறிக்கப்பட்டமைக்கும், இன்னும் பலர் காயமுற்றமைக்கும் எதிராக நாடெங்கிலும் கொதித்தெழுந்த எதிர்ப்பு—குறிப்பாக மாணவர் சந்ததியினர் மத்தியில் எழுந்த எதிர்ப்பு, இழி சொற்களையும், இனத்துவேஷ சுலோகங்களையும் எடுத்துக் காட்டி மறைத்திடக்கூடிய தொன்றல்ல. வெடிகுண்டுகளின் விளைவுகளுக்கும் இழி சொற்களால் ஏற்படும் விளைவுகளுக்கும் உள்ள வித்தியாசத்தை மக்கள் நன்கு அறிவர்.

''பௌத்த நாடொன்றில் வாழும் குழந்தைகள் நன்னடத்தையும், மரியாதையும் உடையவர்களாக வாழுவதை அவதானிப்பது சகல மாதா, பிதாக்களினதும் கடமை'' என்று பிரதம மந்திரி கூறியுள்ளாரென ஜுலை 21ந் திகதி வானெலிச் செய்தியில் அறிவிக்கப்பட்டது. விபஸ்ஸன தியான நிலையத்தில் நடைபெற்ற அச் சங்கத்தின் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார். அந்த சங்கத்தில் புதிய வருடத்திற்கான தலைவராகவும் பிரதமர் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டாராம்.

1971 மார்ச் 16ந் திகதி அரசிஞல் அவசரகாலச் சட்டம் அமுலாக்கப்பட்டது பௌத்த நாடொன்றின் நன்னடத்தையையும், மரியாதையையும் பாதுகாப்பதற்காகவா?

முதலாளித்துவ முறையைத் தொடர்ந்தும் நடத்திச் செல்வதற்கு மக்களின் தலையின் மேல் பளுவை ஏற்றத் தேவையான பீதிநிறைந்த சாதுவான நிலைமையை ஏற்படுத்தத்தான் அல்லவா?

துவக்கினுலும் அவசரகால நிலைமையினுலும் அடிப்படுத்தி வைத்திருக்கும் மக்கள் மத்தியில் இருந்துகொண்டு செய்யும் தியானத்தை விபஸ்ஸன தியானம் என்ரு கூறுவது.

## பதிஞெரு...

5ம் பக்கத் தொடர்ச்சி

கத்தின் அமரதுங்க தந்தரி, தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியின் எம். கே. ஈழவேந்தன், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் எம். பி. செல்லச்சாமி ஆகிய தோழர்கள் அவசரகால நிலைமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினர். அத்துடன் அரச அச்சக ஊழியர் சார்பாக தோழர் வீஜேசிரி பெர்ணுண்டோ அரசாங்க அச்சகம் சம்பந்தமாக அரசாங்கம் நடத்திவரும் தொழிற் சங்க விரோத நடவடிக்கைகள் பற்றி விளக்கினுர். பேராதனை பல்கலைக்கழக வளாகத்தில் நவம்பர் 12ம் திகதி பொலீசார் மேற்கொண்ட பயங்கரவாத நடவடிக்கையை வன்மையாகக் கண்டிப்பதென்ற தீர்மானமும் இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## வடபகுதியில்...

1ம் பக்கத் தொடர்ச்சி

இருந்தார். இந்த வேலை நிறுத்தம் நடந்த போது பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க விரும்பாத தலைவர் அப்போராட்டத்தை முறியடிப்பதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டும் அவை எவ்வித பயனையுமளிக்காது இறுதியில் அவரும், அதிகார சபை முற்றும் பதவிநீக்கத்திற்கு ஆளாக வேண்டி நேர்ந்தது.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர் பிரச்சனை தொடர்பாக நடந்த வேலை நிறுத்தத்தையொட்டி கூட்டுறவு அமைச்சர் கொழும்பில் கூட்டிய மகாநாட்டில் ஏற்பட்ட உடன்பாட்டுக்கிணங்க சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பிரச்சினைகள் பற்றி யாழ் மாவட்ட கூட்டுறவு அதிகாரி விசாரணைச்சபையொன்றை நியமிப்பதற்கு ஏற்றுக்கொண்டதால் வேலை நிறுத்தம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டதென்று அறிவிக்கப்பட்டது.

## சர்வதேச சங்கத்துடன் இணைப்பு

உணவும், அதனுடன் சம்பந்தப்பட்ட இதர துறைகளின் தொழிற் சங்கங்களது சர்வதேச சங்கத்தில் (ஐ. யு. எப்.) இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் இணைய வேண்டுமெனக் கடந்த ஜுலை 16ந் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தின் தீர்மானம் சங்கத்தின் 14வதுபேராளர் மகாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டது.

இத்தீர்மானத்திற்கிணங்க தற்போது சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் பின்வரும் ஸ்தாபனங்களிலுள்ள ஊழியர்கள் சார்பில் இந்தச் சர்வதேச இணைப்புச் செய்யப்படுகின்றது:

சிலோன் கோல்ட்ஸ்டோர்ஸ் பியுயர் பெவரேஜஸ், தேசிய பால்சபை, சிலோன் நியூட்ரிஷனல் பூட்ஸ், சிலோன் புருவரி, சிலோன் சொக்கலட்ஸ், அரசு மாவு ஆலைக் கூட்டுத்தாபனம், சிலோன் டுபாக்கோ, பிரிட்டிஸ் சிலோன் கோர்பரேஷன்.

1920ல் நிறுவப்பட்ட உணவும் அதனுடன் சம்பந்தப்பட்ட இதர துறைகளின் தொழிற்சங்கங்களின்சர்வதேச சங்கத்தில் 56 நாடுகளிலுள்ள 126 சங்கங்கள் 1973ம் ஆண்டில் இணைந்திருந்தன. இந்த சங்கங்கள் 126ல், 17 இலட்சம் அங்கத்தினர்கள் உள்ளனர்.

பரஸ்பர ஒத்துழைப்பு மூலம் இணைந்திருக்கும் ஒவ்வொருசங்கங்களையும் பலப்படுத்துவது இந்த ஸ்தாபனத்தின் நோக்கமாகும். நாட்டின் தேசிய எல்லைகள், தூர அளவுகள், மொழிகள், நாகரிகங்களுக்கிணங்க தோன்றியிருக்கும் பாகுபாடுகளுக்கு எதிராக சர்வதேச தோழமைபாவத்தை நிலைநாட்டுவதே அதன் உண்மையான கொள்கையாகும். இந்த ஸ்தாபனத்தில் இணைந்துள்ள சங்கங்கள் பற்றிய செய்திகளடங்கிய சஞ்சிகைகள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பெயின் எக்ஸ்கெண்டினேவியன்மொழிகளில் வெளிவருகின்றன.

இந்த ஸ்தாபனத்தின் 17வது உலக மகாநாடு 1973ல் ஜெனிவாவில் நடைபெற்றதுடன், 18வது மகாநாடும் அங்கேயே நடைபெற்றது. ஸ்தாபனத்தின் தலைமையகம் சுவிட்ஸர்லாந்தில் ஜெனிவா நகரத்தில் நிறுவப்பட்டிருப்பதுடன் அதன் தூரகிழக்கு பஸிபிக் கண்டங்களின் கமிட்டி காரியாலயங்கள் ஜப்பானில் டோக்கியாவிலும், மலேசியாவில் சிலாங்கூரிலும், ஆஸ்திரியாவில் தால்டனிலும் நிறுவப்பட்டிருக்கின்றன.

## இரட்டைப்பூட்டு தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம் தொடர்கிறது!

இரட்டப்பூட்டு தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 1200 தொழிலாளர்கள், அங்குள்ள தோட்ட அதிகாரியையும், உதவி அதிகாரியையும் உடனடியாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி கடந்த நவம்பர் 12ந் திகதி முதல் வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

''இந்த வேலை நிறுத்தத்தை ஆதரித்து தலவாக்கெல்லை, அக்ரபத்தனை, லிண்டூலா ஆகிய பகுதிகளில் தொழிற்சங்கப் பாகுபாடின்றி சுமார் 60,000 தொழிலாளர்கள் மூன்றுநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர்'' என்று காங்கிரஸ் டிசெம்பர் ஆங்கில இதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

வழமையான வேலை முறைகள் மாற்றப்பட்டதே இரட்டைப்பூட்டுத் தோட்டத்தில் [illegible] வேலைநிறுத்தம் [illegible] தற்கு அடிப்படைக் காரணமாக இருந்ததாம். பின்னர் வெளியாட்களைக் கொண்டு வந்து வேலைநிறுத்தக்காரர்கள் மிரட்டப்பட்டார்களாம். இவ்வாறு தோட்டத்திற்குள் நுழைந்து தொழிலாளர்களை மிரட்ட முற்பட்டார்கள்என்ற சந்தேகத்தின் பேரில் 12 பேர் பொலீஸாரினுல் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார்களாம். இவர்கள் இனத்துவேஷத்தைத் தூண்டும் நிலையை உருவாக்கினுர்கள் என்று கூறப்படுகின்றது.

தொழிலாளர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு அங்கு செயல்பட்ட இ. தொ. கா. தொழிலுறவு இயக்குனர் திரு. எஸ். ரெங்கநாதன் நீதிமன்றத்திற்குச் சென்றுவரும் வழியில் தாக்கப்பட்டாரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய இனத்துவேஷ தொழிலாள வர்க்க விரோத நடவடிக்கைகளைத் தூண்டிவிடும் அதிகாரிகளை அங்கிருந்து அகற்ற வேண்டுமென்றே தொழிலாளர்கள் சங்கப் பாகுபாடின்றி ஒன்றுபட்ட குரலை எழுப்பியுள்ளனர்.

இரட்டப்பூட்டு தோட்டப் பிரச்சனை சம்பந்தமாக நவம்பர் 22ந் திகதி நடைபெற்ற பேச்சு வார்த்தையில் டிசெம்பர் 13, 14, 16ம் திகதிகளில் விசாரணை நடத்துவதற்கு உடன்பாடு ஏற்பட்டுள்ளதாம்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தனுல் கொழும்பு–13 விவேகானந்தா மேட்டில் அமைந்துள்ள சங்கர் சன்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org